[1971 டிசம்பர் 15

அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய இடங்கள்.

* 415 வினு—**திரு. ந. சோமசுந்தரம்** : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய 18 சதவிகிதம் நிரப்பப்படுகிறதா என அறிய ஒரு குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தக் காரியத்திற்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

திரு. அ. தேவேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, 16-ஆக இருந்த சதவிகிதத்தை 18-ஆக உயர்த்தியும்கூட பல இடங்களில் அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அப்படிப்பட்ட குறைகளை நிறைவு செய்ய அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எந்தெந்த இலாக்காவில் நிறைவுபடுத்தப்படவில்லை, உண்மையிலேயே அந்த இடங்கள் பூர்த்தியாக்கப்பட்டதா இல்லையா என்பதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் இந்த மேல் மட்டக் குழுவை அரசு நிறுவியிருக்கிறது. அவர்கள் அவ்வப்பொழுது கூடி ஆராய்ந்து எந்தெந்த இடங்கள் பூர்த்தியாக்க வேண்டுமோ அதைப் பூர்த்தி செய்கிருர்கள். புதிதாக எழும் பதவிகளுக்கு அவர்கள் புதிய முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்களா என்பதை இந்தக் குழு விரிவாகப் பரிசீலனை செய்கிறது.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிவித்துள்ள அந்தக் குழுவில் யார், யார் அங்கம் பெற்றிருக்கிருர்கள் என்பதை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தக் குழுவிற்குத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். துணைத் தலைவர் அரிசன நலத்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர். உறுப்பினர்கள், அரசுத் தலைமைச் செயலாளர். தமிழ்நாடு அரசுப்பணி தேர்வு ஆணைக்குழுத் தலைவர், அரசுச் செயலாளர், சமூக நலத்துறை, அரிசன நல இயக்குநர், தொழில்கள்—வாணிக இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், வேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர், அரசு துணைச் செயலாளர், சமூக நலத்துறை (அரிசன நலம்) குழுவின் உறுப்பினர் செயலாளர்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இப்படிப்பட்ட வேலைவாய்ப்புகள் தருவதில் 23½ சதவிகிதம்

வழங்கப்படுகிறது. ஆனுல் நாம் இங்கே 18 சதவிகிதம்தான் வழங்குகிருேம். எனவே மத்திய சர்க்காரைப் பின்பற்றி 23½ சதவிகிதம் வழங்க முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய சர்க்காரின் பணிமனேகளிலே அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது மாநில அரசாங்கத்தில் செய்யப்பட்டிருக்கும் ஒதுக்கீடாகும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே. பெரும்பான்மை யான பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களில் கம்யூனல் ரொட்டேஷன் முறை பின்பற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அப்படிப் பின்பற்ருமல் இருக்கும் ஊராட்சி ஒன்றியங் கள்மீது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு பரிசிலிக்கிறது, ஆனுல் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏன் பூர்த்தி செய்ய முடியவில்லை என்று கேட்டு பூர்த்தி செய்து விடுங்கள் என்ற தாக்கீதுதான் அனுப்புகிறது. சில புகார்கள் நேரடியாகவும் விசாரிக்கப்படுகின்றன.

தண்ணீர்த் தீர்வை

*416 வின—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரியாற்றில் இருந்து பம்புசெட்டு மூலம் தண்ணீர் இறைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துபவர்களுக்கு தண்ணீர்த் தீர்வை போட அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தமிழ்நாடு பாசனத் தண்ணீர் தீர்வை சட்டம், 1865 (தமிழ்நாடு சட்டம் VII/ 1865) கீழ் ஏற்பட்ட விதிமுறைகளின்படி ஏற்கனவே தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டு வசூலித்து வரப்படுகிறது.

(இ) காவிரியாற்றிலிருந்தும் அதன் பிரிவு வாய்க்கால்களி லிருந்தும் பம்பு செட்டு மூலம் தண்ணீர் இறைப்பதற்கு பொதுப்பணித் துறையினுடைய முன் அனுமதி பெறவேண்டும். அப்படி முன் அனுமதி பெருமல் தண்ணீர் இறைப்பவர்கள்மீதும், தண்ணீர் இறைக்க உத்தரவு பெற்றிருந்தும் அந்த உத்தரவிலுள்ள நிபந்தனேகளே மீறுவோர் மீதும் தண்டத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. நிலையான ஆயக்கட்டுதாரர்களின் நியாய மான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தை மனதிற்கொண்டே தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. தண்ணீர்த் தீர்வை, தண்டத் தீர்வை அமைப்பையும், அவற்றை விதிப்பது சம்பந்தமாகவும் ஆராய்ந்து விரிவான அறிக்கை அனுப்பும்படி வருவாய்த் துறை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.